www.tamilarangam.net

# தீர்வு




ஐப்பசி 1989

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நிமிர்ந்த நன்னடை
நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும்
அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லையாம்"

— பாரதி —

www.tamilarangam.net

மலர் 1 இதழ் 7

# சிந்து

ஆசிரியர்:
சி. உதயகுமார்

வடிவமைப்பு:
தேசன்

ஆலோசனை:
திதி

கலை இலக்கிய வெளியீடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்களுடன் சில நிமிடங்கள்...

என்ன நடக்கின்றது எமது தேசத்தில். வல்லாதிக்கத்தின் கொடூர பிடியும் அதிகார மமதைகளும் அடக்குமுறைகளும் சுதந்திரத்திற்கான போராட்டங்கள், போர் முனைகளும் இழப்புகளும், இரத்தசாட்சிகளும் இழப்புகளின் முடிவில் பேச்சுவார்த்தைகளும்

இன்றும் எத்தனை காலங்கள் இந்த இழுபறி நிலைமை. பாதிப்புகள், இழப்புகள் தமிழ் பிரதேசத்தின் ஒவ்வொரு வீட்டின் வாசலிலும் சாட்சியமாய் உட்கார்ந்திருக்கின்றன. உறைந்து போன இதயங்களிற்கும் இழந்து போன உறவுகளிற்கும் பதிலும் என்ன...?

மக்களின் அவலங்களும் அவர்கள் வாய்ப்புகளும் தோல்விகளாக தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. மாவீரர்கள் மறைந்து போனவர்கள் வெறுமையான இடங்கள் மறைந்தும் கொண்டிருக்கின்றார். அரசியல் அறிஞர்கள் உயிர்வாழ்தலிற்கான வாழ்க்கையை பெறுவதற்கு தெரிய பதிலும் மறைந்து அரசியலிற்கானவர் சுதந்திரத்திற்கான வேட்கையை என்ற நிலையில் தேசங்கள் மறைந்து போனவர்கள். மக்களின் பலத்துடன் நேர்மையுடன் அறிந்த போனவர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொலிஸ் பயிற்சிகள், பயாகதர்காரர், நீர்
மானவர்கள், ... ஒரு அப்பொழுதைப் பட்டுக்
கொண்டிருக்கின்றது.

இனி என்ன நடக்கும்..... ?
அப்பொழுதும் அதுவுடன்
கேட்கக் கொண்டிருக்கும் கேள்வி இது.

இத்தருணத்தில் மக்களின் எண்ண
அபிலாசைகளையும் கருத்தில்,
எண்ணங்களையும் அறிவுரைகளையும் கட்டாயம்
கொள்ள வேண்டியது அனைவரினதும் கடமை
நடைமுறையிலும். சம்பந்தப்பட்டவர்கள், பெரு
ப்பாராளுமன்ற மக்களின் மனங்களைப் புரிந்து
கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

மக்கள் இன்றேல் எதுவுமில்லை.
அரசியல் இல்லை, அதிகாரம் இல்லை. எமது
மக்களின் மேன்மை வாழ்வு எதிர்பார்ப்பு இல்லை.
மக்களுடன் சேர்ந்து, மக்களின் விருப்பங்க
ளுடன் இந்நூலும் இணைந்து விண்ணப்பிக்
கின்றோம்.

— ஆசிரியர் —

இதழுடனான அனைத்துத் தொடர்பு
கட்கும்;

S. UTHAYA KUMAR
C/O N. GANDHINESAN
18 RUE HENRI BARBUSSE
92000 NANTERRE

www.tamilarangam.net

# தமிழ் இனமும் தேசிய எழுச்சியும்

ஒரு பார்வை

செ. கணேசலிங்கன்

தேசம் என்பது நான்கு முக்கிய அம்சங்களைக் கொண்டு வரலாற்று ரீதியாக அமையப்பெற்ற நிலையான மக்கள் சமுகம் என்று ஸ்டாலின் விளக்கினார். அவையாவன; 1) ஒரு பொதுவான மொழி 2) பொது நிலப் பகுதி. 3) பொதுப் பொருளாதார வாழ்வு 4) பொதுவான கலாச்சாரத்தைக் கொண்ட பொதுவான மன இயல்பு. (மதம், கலாச்சாரம், வாழும் முறை ஆகியன)

இந்நான்கு முக்கிய அம்சங்களில் ஒன்று பாதிக்கப்படும் போதே தேசிய இனப் பிரச்சனை தலை தூக்கலாம். இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை நான்குமே பாதிக்கப்பட்டன. அதனாலேயே நிலைமை. மிக மோசமடைய வாய்ப்பு ஏற்பட்டது. சிங்களம் ஆட்சி மொழியானது. பரம்பரையாக வாழ்ந்த தமிழரது நிலப்பரப்புகள் சிங்களக் குடியேற்றத் தினால் பறிக்கப்பட்டன. அவர்களது பொருளாதார வாய்ப்புகள் மோசமடைந்தன. வேலையின்மை, உயர்கல்வி வாய்ப்பின்மை, தமிழர் பகுதிகள் தொழில் வளத்தில் புறக்கணிக்கப் பட்டமை பாதிப்பு ஏற்படுத்தின. பௌத்த மத ஆதிக்கமும் இந்துமத புறக்கணிப்பு,கோவில்கள் நூலக எரிப்பும்,உளவியல் ரீதியாக தமிழ் மக்களின் சினத்தை மேலும் தூண்டின.

பாராளுமன்ற ஜனநாயகம் இவற்றைத் தீர்க்க எவ்விதமும் பயன்படவில்லை. பாராளுமன்ற சந்தர்ப்ப வாதத்தில் இடதுசாரிக் கட்சிகளே தேசிய சிறுபான்மை இன மக்களின் தேவைகளைப் புறக்கணித்தன. பேரின வாதம் பாசிச வடிவம் எடுத்து அடக்கி ஒடுக்க முயல்கிறது. நிலைமை மேலும் மோசமடைவதைக் கண்டும் தீர்க்க வழி தெரியாது பிரிவினை வரை பிரச்சனை நீள்கிறது. தனியான தேசம் அமைக்கக்கூடிய நான்கு அம்சங்களும் தமிழர்களுக்கு உள்ளன. எல்லா வர்க்

www.tamilarangam.net

கங்களும் அணி திரண்டே தமிழீழக் கோரிக்கையை முன் வைக்கின்றனர். தமிழீழத் தொழிலாளர், விவசாயிகளும் போராட்டத்தில் இணைகின்றனர்.

இவ்வேளை மற்றோர் வினா எழுகிறது. இப்போராட்டம் தேசிய விடுதலைப் போராட்டமா? அல்லது புதிய ஜனநாயகப் புரட்சியா? அல்லது சோஷலிசப் புரட்சியா? தேசிய விடுதலைப் போராட்டமாயின் தேசிய முதலாளிகள், குட்டி பூர்ஷ்வாக்கள் தலைமை தாங்கி பிற வர்க்கங்களையும் இணைந்து போராடுவர். புதிய ஜனநாயகப் புரட்சியாயின் தொழிலாளி, விவசாயிகள் தலைமையில் பிற நேச வர்க்கங்களையும் சேர்த்துக் கொள்வர். பாட்டாளிகள் மட்டுமே தலைமை தாங்கி நடத்து வதே சோஷலிசப் புரட்சியாகும்.

ஆயுதப் போராட்டத்தை முன்வைக்கும் வர்க்கத்தையும் கோட்பாட்டையும் கொண்டு புரட்சியின் தன்மையை நாம் அறிந்து கொள்ளலாம்.

ஒரு தேசிய இனம் பிரிந்து போகும் போராட்டத்தை முன்வைக்கும் வேளை மார்க்சிஸ்டுகளும் தொழிலாளர் வர்க்கங் களும் ஒரு முக்கிய விஷயத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும் என லெனின் வலியுறுத்தியுள்ளார், அப் பிரிவினை பாட்டாளி வர்க்கத்திற்கு நலன் பயக்குமா என்பதைக் கருத்தில் கொண்டே அதற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றார்.

ஏகாதிபத்திய வல்லரசுகள் தம் தேவைகளுக்காக நாடு களைப் பிரித்த வரலாறுகளை நாம் பார்த்துள்ளோம், தேசிய இனங்களையே இரண்டாகப் பிரித்துள்ளதையும் காணலாம். ஜெர்மனி, கொரியா, வியத்நாம் இதற்கான உதாரணங்களாகும், பங்களாதேஷ் நாட்டின் தேசிய விடுதலைப் போராட்டத்திலும் இந்தியாவிற்கு எதிரியைப் பிரிக்கும் ஒரு தேவை இருந்ததினாலேயே பிரிவினை துரிதப் படுத்தப் பட்டது.

முதலாளித்துவ நாடுகள் காலனி ஆதிக்கங்களை ஏற் படுத்திய காலகட்டத்தில் தமது சந்தை ஆட்சித் தேவைக்காக ஒரு தேசிய இனத்திற்கு ஒரு அரசு மட்டுமல்ல, ஓர் அரசின் கீழ் பல தேசிய இனங்களை உள்ளடக்கியும் ஆண்டுள்ளன, இந்தியா, இலங்கை உதாரணங்களாகும்.

ஏகாதிபத்திய, காலனி ஆதிக்க கால கட்டங்களில் தேசிய இனத் தேவைகள் அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையிலேயே தேசங் கள் ஆளப்பட்டன. எல்லாத் தேசிய இனங்களும் ஒன்று பட்டு விடுதலைப் போராட்டத்தை நடத்துகின்றன. தேசிய விடுதலை கிட்டிய பின்னர் பெருந் தேசிய இனங்கள் சிறுபான் மைத் தேசிய இனங்களை அடக்கி தேச எல்லைகளைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காப்பாற்ற முயல்கின்றன. இலங்கை, இந்தியா இவற்றிற்கும் உதாரணமாக விளங்குகின்றது.

இலங்கையில் ஒற்றை ஆட்சியின் கீழ் இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்கள் ஆகிய சிறுபான்மை இனங்கள் பௌத்த சிங்கள பேரின ஆட்சியால் நசுக்கப் பட்டன. இந்தியாவில் மொழி அடிப்படையில் மாநிலங்கள் பிரிக்கப் பட்டு ஓரளவு சுயாட்சி வழங்கப் பட்டன. (இத்தகைய மாநிலங்களுக்கு பிரிந்து செல்லும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.) இதன் மூலம் பிரதான தேசிய இனங்களின் தேவைகள் ஓரளவு சமரசம் செய்யப்பட்டுள்ளன. இலங்கையில் இத்தகைய வாய்ப்புகள் கூட சிங்கள பேரினவாத ஆட்சியால் வழங்கப்படவில்லை.

ஆழ்ந்து நோக்கும் போது இந்திய தேசிய இனப் பிரச்சனை மிகவும் சிக்கலானதாகத் தெரிகிறது. தற்போதைய மொழிவழி மாநில அமைப்புகளுள்ளேயே சிறுபான்மையா யுள்ள தேசிய இனங்கள் அடக்கி ஒடுக்கப் படுகின்றன. உதாரணமாக, தமிழ்நாட்டை எடுப்போமாயின் அங்கு சிறுபான்மையாக வாழும் தெலுங்கர், கன்னடியர், மலையாளி கள் ஆகியோர் தம்வீட்டில் தாய்மொழியைப் பேசிய போதும் தமிழ்மொழி மூலம் கற்க வேண்டியவராயுள்ளனர். அதுபோலவே கர்நாடக மாநிலத்தைப் பார்ப்பின் அங்குள்ள சிறுபான்மையினரான தமிழர்கள், தெலுங்கர், மலையாளிகள் முதலியோர் கன்னட மொழி மூலம் கல்விகற்க நிர்ப்பந்திக் கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. அண்மையில் கன்னடியர் தமிழர்களுக் கிடையில் பங்களூரில் நடை பெற்று வரும் மோதலை யாவரும் அறிவர்.

இந்தியாவில் தரகு முதலாளித்துவம் ஆளும் வர்க்க மாக இருப்பதால் அவர்களின் மொழியான ஆங்கிலம் இன்றும் செல்வாக்குப் பெற்றதாக உள்ளது. நகரங்களில் ஆங்கிலக் கல்வியே முக்கியத்துவம் பெறுவதால் மாநிலப் பொது மொழி சிறுபான்மை யினத்தவர்மேல் திணிக்கப் படுவது ஓரளவு தணிக்கப் பட்டுள்ளது. உதாரணமாக சென்னையில் வாழும் தெலுங்கர், தமிழர்கள் போல ஆங்கிலம் மூலம் கற்கின்றனர். கிராமங்களில் நிலைமை அவ்வாறில்லை.

நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைகள் உடையும் போதே தேசிய இனப் பிரச்சனைகள் வேகம் பெறுகின்றன என்பதை முன்னரும் கூறினேன். பஞ்சாப், அசாம் மாநிலங்களில் இன்று வேகம் பெற்றுள்ளதன் காரணம் அங்கு முதலாளித் துவ உற்பத்தி முறைகள், வளர்ச்சியடைவதே யாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழ் நாட்டிலேயும்

www.tamilarangam.net

ஓரளவு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் நாட்டில் இக்கட்டத்தில் ஒரு பிரிந்து செல்லும் போராட்டத்தை முன் வைக்க முடியுமா? இலங்கையில் தமிழரிடை ஏற்பட்டது போன்ற எழுச்சியை ஏற்படுத்த முடியுமா? அதற்கேற்ற சூழல்கள் உள்ளனவா? இன்று பலராலும் ஆராயப்படுகிறது. தமிழ் நாட்டில், தமிழ் தேசிய முதலாளிகள் தரகு முதலாளிகளாக ஆங்கிலக் கல்வியை முதன்மைப் படுத்துகின்றனர். இலங்கையில் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளிலேயே பல்கலைக் கழகம் வரை கல்வி கற்பிக்கப் படுகிறது.

மேலும், தமிழ் தேசிய முதலாளிகள் தரகு முதலாளிகளாக மத்திய ஆளும் வர்க்கத்துடன் பரந்த இந்தியச் சந்தைக்காக இணைந்துள்ளனர்.

நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைகள் இன்னும் தமிழகத்தில் நிலைத்துள்ளன. இலங்கையில் பெரும்பாலும் உடைந்து விட்டது. தேசிய இன எழுச்சி இக்கட்டத்திலேயே வேகமடைகிறது என்பதே கோட்பாடு.

தமிழ் நாட்டில் நிலவும் மொழிவழி மாகாண ஆட்சி போல தேசிய உணர்வுகளை ஓரளவு தணிக்கும் மொழிவழி மாவட்ட ஆட்சி இலங்கையில் கிடையாது என்பதும் நினைவு கூரவேண்டும்

இலங்கையில் தமிழர்களுக்கு பொது மொழி, பொது நிலப்பரப்பு, பொதுப் பொருளாதாரம், மதம், கலாச்சாரம் ஆகியவை பாதிக்கப்பட்டதால் ஏற்பட்டது போன்ற முரண்பாடுகள் தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ளனவா என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

பல்வேறு தேசிய இனங்கள் உள்ள தேசத்தில் ஒரு தேசிய இனத்திடை எழுச்சி ஏற்படும்போது பிற தேசிய இனங்களிடையேயும் நினைவு பூர்வமான தாக்கம் ஏற்படவே செய்யும். ஆயினும் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையின் உடைவும், இனதேசிய முதலாளிகளின் எழுச்சியும் மேலே கூறிய பிறபாதிப்புகளும் ஏற்படும் வேளையே அது பெரிய போராட்ட வடிவம் பெறும்.

இந்தியாவில் தேசிய இனப்பிரச்சனை ஒரு சில மாநிலங்களிலேயே உள்ளது என்று கூறுவதும் அர்த்த மற்றதாகும்: இவ்வாறு கூறுவது எதைப் போல எனின் இந்தியாவில் சாதிப் போராட்டங்கள், மத மாற்றம், அரிசனர் எரிப்பு ஒரு சில கிராமங்களில் நடைபெறுவதைப் பார்த்து அக்கிராமங்களில் மட்டும் சாதி அமைப்பு இருப்பதாகக் கூறுவதைப் போன்றதாகும். வரலாற்றில் குறிப்பிட்ட காலகட்டத்திலேயே தேசிய இனப்பிரச்சனைகள் முகிழ்கின்றன. முதலாளித்துவ அமைப்பிலே தேசிய இனப் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டதாக அண்மையில் வரலாறு இடையாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மொழி வழி மாகாண ஆட்சி, மாநில சுயாட்சி, கூட்டாட்சி அல்லது பெடறலிசம் ஆகியன முதலாளித்துவ அமைப்பில் இப்பிரச்சனையின் வேகத்தை தணிக்க எடுக்கப் படும் முயற்சியாகும். இங்கு எந்த தேசிய இனமும் பிரிந்து செல்ல அனுமதிக்கப் படுவதில்லை. இம் முறைகளோடு சுய நிர்ணய உரிமை, பிரதேச சுயாட்சி ஆகிய வார்த்தைகளைக் கூறி நாம் மயக்கம் ஏற்படுத்தி விடக்கூடாது. லெனின், ஸ்டாலின் ஆகியோர் தேசிய இனப் பிரச்சனையைத் தீர்க்க எடுத்த முறைகளே இவையாகும்.

சுய நிர்ணய உரிமை என்பது குறிப்பிட்ட தேசிய இனம் இணைந்து கூட்டாக வாழ விரும்பாவிடின் பிரிந்து போகும் உரிமையையும் கொண்டதாகும். குறிப்பிட்ட சிறுபான்மை இனம் ஒரு குறிப்பிட்ட பகுதியில் பிரதேச சுயாட்சி நடத்தும் உரிமையும் சோஷலிச அமைப்பிலேயே ஏற்படுத்த முடியும். அதுவே பிரதேச சுயாட்சியாகும்.

சொந்த நாட்டிலேயே மற்றைய தேசிய இனங்களை அடக்கும் எந்தத் தேசமும் சுதந்திரமாக இருக்கமுடியாது. என ஏங்கெல்ஸ் கூறினார். அரைக்காலனி, நவகாலனி நாடு களிலேயே பெரும்பாலும் இத்தகைய தேசிய இன அடக்கு முறைகள் நிலவுகின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திலே இலங்கை இன்றோர் நவகாலனியாக விளங்கு கிறது. 'ஏகாதிபத்தியத்தை விரட்டாது தேசிய இனங்கள் விடுதலை பெறமுடியாது' என லெனின் கூறியுள்ளார். ஏங்கெல்சின் கூற்றுப் படியும் சிங்களவரும் சுதந்திர மற்ற வர்கள் என்பது தெளிவாகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் இலங்கை மக்களுக்கு மிடையிலுள்ள முரண்பாடே பிரதான முரண்பாடாகும். அதைத் தீர்ப்பதை விட்டு சிங்கள பேரின வாதத்திற்கும் தமிழருக்கும் இடையில் நிலவிய தேசிய இனப்பிரச்சனை யாகிய துணை முரண்பாட்டை பகைமை முரண்பாடாக தூக்கியதன் விளைவே யூலை' 83ல் ஏற்பட்ட அழிவுகளாகும். இன்று ஏகாதிபத்தியங்களிடை நிலவும் முரண்பாட்டுக் களமாக இலங்கை தள்ளப்பட்டுள்ளது.

முதலாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடக்கூடிய போராட்டத்தில் தலைமை தாங்கக் கூடிய வர்க்கம் எது? முன்னேறிய யந்திர உற்பத்தியில் ஈடுபட் டிருக்கும் பாட்டாளிகள் இலங்கையில் மிகக் குறைவே, இலங்கையிலுள்ள மிகப் பெரிய பாட்டாளி வர்க்கம் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் என்பதை மறுப்பதற்கு எவருமில்லை. இவ்வர்க்கம் பல்வேறு வகையாகப் பிரிக்கப்

பட்டு அடக்கி ஒடுக்கப்பட்ட சோக வரலாறே இலங்கையின் இன்றைய பிற்போக்கு நிலைக்குரிய காரணமாகும்.

பிரிட்டிஷ் காலனி ஆட்சிக் காலத்தில் இவர்களும் பிரிட்டிஷ் பிரஜைகளாகக் கருதப்பட்டனர். 1947 ல் நடைபெற்ற தேர்தலில் மலையகத் தமிழர்கள் ஏழு நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தேர்ந்தனுப்பினர். மேலும் ஏழு இடது சாரிகள் தேர்ந்தெடுக்கப் படுவதற்கும் இவர்கள் வாக்குகளே பயன்பட்டன. தொழிலாளர்களின் எழுச்சியைக் கண்ட அன்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவனான சேனநாயக 1948 ல் சட்டமியற்றி மலையகத் தமிழர் அனைவரையும் நாடற்றவர்களாக்கி விட்டான்.

இதைத் தொடர்ந்து இலங்கைத் தலைவர்களும் இந்தியத் தலைவர்களும் பேரம் பேசி மலையகத் தமிழரின் ஒற்றுமையையும் போராட்டத்தையும் சிதைத்து வந்துள்ளனர். இன்றும் இலங்கையின் வடக்குக் கிழக்கா, இந்தியாவா என்ற ஊசலாட்டத்தில் அவர்கள் பிரிக்கப் பட்டு அடக்கி ஒடுக்கப் பட்டுள்ளனர். இந்நிலை நீடிக்கப் போவதில்லை. இலங்கையின் புரட்சிகர வரலாற்றில் மலையகப் பாட்டாளிகளின் பங்கு மிகப் பெரியதாக அமையும் என்பதில் ஐயமில்லை. இன்றும் இவர்கள் தூங்கும் சிங்கங்களாக உள்ளனர். அவர்கள் விழித்தெழும் காலம் வெகு தூரத்திலில்லை.

* * * * * * *

## இதுதான்

காலை

பட்டும் ஆடை
அணி அலங்கார
ஒப்பனைகளுடன்
அரங்கேறிய உடல்கள்
அடையாளம் தெரியவில்லை

மாலை

மேடையின் பின்னே
ஒப்பனை அறையின்
ஓரிய வாயிலில்
காத்திருக்கின்றன
முகம் பார்த்த

— புலியரசு —

www.tamilarangam.net

# கோமாலையும் வேலையும்

— சி. கஜேந்தி —

இன்று ஞாயிறு. விஜய் வசிக்கும் பொன்னல் அயல் ஊர் பரிவில் இருந்தும் நண்பர்களும் பரிவின்றி இருப்பவர்களும் அந்த ஊரில் கூடி விடுவார்கள்.

அனைவருமாகவர்களின்று ஞாயிறு மட்டும் தான் விடுமுறை. அந்த ஒரு நாளில்லென்றாலும் நண்பர்களோடு சந்தித்து கதைப்பதில் அவர்களின் சந்தோஷம். ரெயில்வேயில் வேலை செய்பவர்கள் பாக்டரியில் வேலை செய்பவர்கள், கிளினிக் வேலை செய்பவர்கள், பேப்பர் வேலை செய்பவர்கள், வேலை இல்லாதவர்கள் இப்படி பல தரப்பட்டவர்கள் கூடுமிடம்; சந்தித்து அளவளாவுமிடம் அந்த ஊர் தான். எல்லோரும் கூடுவதற்கு மடமல்ல, பெரிய வீடுமல்ல, வீடொன்றுதான் கொஞ்சம் பெரியது.

இந்த வாரம் கதைக்கப்போறது, வந்து நாட்டுக்கு வருடக்கணக்காக நாட்டுமனிதர்களாக அந்த ஊரில் இருக்கிறார்கள். ஜெயபால வந்து ஆறு வருடம் தான். அவன் இந்த ஊரில் எடுத்து நான்கு வருடங்களாகின்றன. அவன் சம்பாதித்த காசு, பெருமை, மதிப்பு, விலாசம் எல்லாம் அவனது சகுனியத்தனமூர் விரைவாக சேர்த்தவை தான். குடியில் கூட விடாசம் தான். அவனது பெயர் ஜெயராமன...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தந்தையாரின் பெயர் ஐயாத்துரை. அலுவலகப் பதிவுகளில் தந்தையாரின் பெயர்களைப் பாவிப்பது தான் முறை. அதுவே பலர் தந்தையார்களின் பெயர்களையே சொல்லி அழைப்பர். அதுபோல தவராசாவையும் ஐயப்பா என்று அன்புடனும், கேலியாகவும் அழைப்பர். அவனது விகடமான பேச்சும் அடுக்குவசனங்களும் தயாள சிந்தையும் பலரையும் கவர்ந்து அவன் பெயரை உயர்த்தியது.

அவனிடம் பொதுநலத்தாபனங்களின் தொடர்பும், வெளி, பொது விவகாரங்களின் தலையீடும் இருப்பதால் செய்திகளையும் வேறு விவகாரங்களையும், விளக்கங்களையும் அவனிடத்திலிருந்து தெரிந்து கொள்வதற்காகவும் நண்பர்கள் வருவதுண்டு.

ஐயாப்பாவின் நாடகம் அன்று அமர்க்களமாக இருக்கும். ஊரில் நிகழ்ந்த புதினங்கள் வந்தவர்களிடம் முதல் முதலிடம் கொடுப்பதும் இந்த நாடகம் தான். வயது வித்தியாசமோ சாதி வித்தியாசமோ இல்லாமல் வித்தியாசமான நட்போடு காணப்படும் கைவந்த மனிதனை மதித்த கண்ணியம் பழகும் சிறந்த திறனில் பட்டறிவினையும் விளக்கமளித்து வந்தனர்.

அரசியல், சினிமா, நாட்டு நடப்பு வீட்டு நடப்பு, உணர்வுமிக்க இவைகளைப் பற்றி விவாதிக்கலாயினர். வேலை செய்பவர்கள், வேலை இல்லாதவர்கள், சோம்பலில் இருப்பவர்கள், சோம்பலோடு வேலை செய்பவர்கள், காட்டார்கள், கிரிக்கெட் காரர்கள், அதுமாதிரி விளையாட்டுக்காரர்கள், விளையாடாதவர்கள், எல்லோரும் தத்தம் தாம்பரியங்களை பரிமாறிக் கொண்டிருந்தனர்.

பரிமாற்றங்களின்போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிலவேளைகளில் இருவரும் சேர்ந்து சிறுசிறு சேட்டைப் புரிவதும், அவர்களுடைய முரண்பாடுகள் கண்டனங்கள் வருவதும் இயல்பு.

ஊரில் எனக்கு கூட இருந்த நாள் இவ்வொன்றும் இவ்வொரு வகையாகத் தான் இருக்கும். நேரோ இடத்தில் கொண்டு மண்ணிருந்து அதனைச் சுத்தம் போக வேண்டும். இடைக்கிடை வண்டிச் சவாரியும் இருவருக்கும் இருந்தது தான் செய்யும். பெரிய மனதுள்ளவர்கள் பெருந்தன்மையோடு பொறுமையோடு இருந்தார்கள். அதனால் அந்த பொறுமையை கையாலாகாத் தனமாக எண்ணாமல் இருந்தார்கள்.

"ஒரு படம் எடுத்தால் பார்க்கலாம்" இது சிவகன்.

"படத்தில் மண்ணிலேட்டையும் விட்டிட்டு... வீட்டைப்பற்றி நாட்டைப்பற்றி ஏதாவது கதையுங்கள்"

இது மணியுடைய கதை!.

பாலன் மனதிற்குள் ஆத்திரப்பட்டவனாக, "சொல்லுற ஆளைப்பார், நாட்டைப்பற்றிக் கதைக்கிற ஆக்கள், உங்கட உடுப்பைப் பற்றிப் போட்டுக் கிடந்த பிள்ளைகள் உடுப்பைப்பற்றி வேண்டுமென்று அந்த பெண்ணைப் பார்த்து வயிறெரியப் பற்றிக் கதைக்கிறது!"

மணி சொல்லுவதோடு வேலை செய்பவன். மற்றவர்களோடு இப்பிடிக் பார்த்தால் வருமானம் இரட்டிப்பு; காசு கூடக்கூட தேவைகள் அதிகரிப்பது என்பது உண்மைதான். அத்தேவை என்ற தேசிய உடையணிந்த அந்தச் சியின் வெளிவட்டமும், மனதிற்குக் காசு கூடக்கூட ஏதோ ஆசைகளும் தேவைகளும் கூடிக்கொண்டே வந்தது. ஏற்றமும் இல்லை இல்லை என்று வாய் பொருமிக் கொண்டேயிருப்பான். காசு நடப்பதாக வல்ல காரணங்கள் நாளொன்று வாழும் நடைப்பிணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்படியான பெரும் இடமான வருவா சொந்தம் தெரிந்திருந்தால் இவனைக் காப்பிலேயே அழைத்திருக்கலாமே.

x x x

'நேரம் காலைக்கு இன்று போல இந்த ஒரே அமர்க்களமாயிருக்கே....' பத்து இடத்தில போய் பத்துப்பேரை சந்திக்கிறதிலும் பார்க்க ஒரே இடத்தில பத்துப்பேரைச் சந்திக்கிறது எவ்வளவு ஈஸி தெரியுமா?

'கண்டபடி கோர்விகளைக் கேட்டு குடிப்பி திண்டாட வைச்சிடுவாங்க'

'இப்படிப் பெருநாள் கழித்து வெளிக்கிட்டிருக்கா சுற்றி பிரச்சினைகள் எதிர்ப்புகள் சந்திச்சு சமாளிக்க வேணும், இல்லாட்டி திண்டாடமாகும் காய்ச்சா எப்படியிருக்கும் அதுமாதிரித்தான்'

அவனது சோர்ந்துபோன இதயத்திற்கு தட்டி உசார் கொடுத்தான் கொண்டே தனைத் தட்டித்தான் மற்றவன்.

விமலன் நகுலின் குனிந்தகண்ணை படிப்புடனை பார்த்துவிட்டு,

"ஏனோ பேப்பர் சத்தம் கேட்டு புறந்தப் ஏதும் விக்க வாறீங்களோ? அல்லது இவனைப் பொடியனோ தெரியாது...." ஸினை வாடமாக சொன்னான். ஒரு நிமிடம் மௌன அமைப்பு.

'உங்களையெல்லாம் சும்மா சொல்லக்கூடாது.... நீங்களெல்லாம் யாரோவா தட்டுகிறாம் போல இருக்கு... போய்த்திறவுங்கடா'

யோகனின் அதட்டல் செவியாய் த்து விமலன் போய்க் கதவைத் திறந்தான்.

அரோப்பியர்களைப் போல வாசலில் வைத்தே யார்? என்ன விடயம்? எங்கே?


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று விசாரித்தான். ஐயப்பா அதிகாரத் தோடு

"டேய் போதன் ஆக்கள உள்ள கூட்டிக் கூடவச்சாத்து இந்த நாள்ள. பொடியன்கள் உருப்பு பார்த்திண்டேயிருக்குதுகள்"

இரண்டு இளைஞர்கள் சைக் ளுடன் ஆலயத்துக்குள்ளை முன்மொழிந்து கொண்டு பிரவேசித்தனர். ஐயப்பா கைலாகு கொடுத்து "வாங்கோ இருங்கோ" வரவேற்றான்.

தெரியாத முகங்கள்... நால்வேரும் நடக் கின்றவே ஆராய்ந்தனர். வந்தவர்களில் ஒருவன் வந்துள்ளதை விடயத்தை சாற்றிவிளக்கச் சொன்னான்.

ஊரில் செல்வந்தர் சுகந்த பேரா காலக் கோயில் ஒன்றைப் புனர் நிர்மாணம் செய்வ தற்காக வெளிநாட்டிலுள்ளவர்களிடம் நிதியுதவி கோரி எழுதியிருந்தனர். அதற்காக நிதி திரட்ட முற்பட்ட போது சில இடங்களில் விவாதங்கள் எழுந்ததாக வாதங்கள் கேட்கப்பட்டன. கேள்விகள்

"உங்கட வீட்டுத் தேவைக்கு காசு சேர்க்கிறீர்களா?"

"காசு சம்பாதிக்கிறதுக்கு இப்படியொரு வழியா?"

"இந்தக்காசு உண்மையில பள்ளிக்கூடத்திற்குப் போய்ச் சேருமா?"

"உண்மையில சேருமெண்டால் நல்லம்"

விழுப்புண்ணடைந்த மாணவர் பிரதேசத்தவர் க்கள், இவற்றையெல்லாம் எதிர்கொண்டபடியே அவ் நிகழ்ச்சி ஒன்றைத் தயாரித்து அந் நிகழ்ச்சி மூலம் நிதிதிரட்டும் பணிக்கு ரிக்கட் விற்பதற்காக வந்திருந்தனர்.

தனியொருவன் பிரவாங்கைகட்ட. கார் வாங்கவும் காணிவாங்கவும் இந்திய சினிமாக் கலைஞர்களை வரவழைத்து நிகழ்ச்சிகளை நடத்தின

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயிரந் தேனீக்கள் போகிற மாதிரி சனங்கள் அள்ளுப்பட்டு பள்ளத்தை நாடி நீர்நிற வெள்ளம் மாதிரி போகும். எத்தனை பிரவாகம்! எங்கு போகிறது? என்று பாராமல் கோலமாய் போகும் அறிவுஜீவிகள்.

ஒரு பக்கம் பார்க்கும் போது அது சரியாகத் தான் படுகின்றது. யதார்த்தம் அது. அது நாடகங்கள் புதுப்பரிமாணம் பெற்று மணித்தியாலங்கள் இரவு பகலாக மேடையில் உழைத்து மேடையப் போகும் சமுதாயத்தில் மனமாற்றம் சிந்தனை மாற்றம்.... விட்டுக்கவலை... நாடகம் வேகமான மாற்றம் கொஞ்ச நேரம் தாக்கங்களை ஏற்படுத்துகின்ற ஒரு மாதிரி நிகழ்ச்சியைப் போகின்றார்கள். நீண்ட நேரம் இருக்கின்ற அது எந்நேரமும் சமயங்களில் இருக்கும். கொஞ்ச நேரமாவது இந்நிகழ்வின் ஆற்றலின் தாக்கம் வீச்சு, கலை, மணம் என்று கொள்ளவும் அதன் தன்மையை அறிந்து கொள்ளவும் முடியும்.

சிந்தனைகள் செயல்கள் மாறுபடும் போதுதான் புதிய சிந்தனைகள் பிறக்கும். நடைமுறையில் அனுபவங்களில் புதுப்புது மாற்றங்கள் வரும் போதும் சிந்தனை தெளிவடையும் போதும் நல்ல புதிய காரியங்களைச் செய்யத்திட்டங்கள் உருவாகும். அறிவு விருத்தியடையும். இவ்வியாபின் முன்னேற்றமாகவிடும். செயல்களில் சிந்தனைகளில் மாற்றம் ஏற்பட்டால் தான் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படும்.

நடிகவர்களாலே தயாரித்த இயல், இசை, நாடக நிகழ்ச்சியொன்றை நடத்தி காசு சேர்க்கலாம் என்ட எண்ணத்தில், ஓட்டத் தான் வந்திருக்கிறம். சும்மா பள்ளிக் கூடத்துக் கொண்டு காசு சேர்க்கப் போன சனம் தருகிறார்கள் இல்ல... தம்பி... அடுத்தகிழமை கேள்வி கேட்டுக் கொடுப்பினம்...'

வந்தவர்கள் சொன்னது

www.tamilarangam.net

அமோதித்த ஜெயாப்பாவும் மோகனும்,
'நம்மவரும் இப்படித்தான் இன்றும் சூது
க்கேடு நாட்டுக்கும் அந்நியர்க்கும் காட்டிக்கொடுக்கக்
கூடிய ஆபத்தை அறிய யாரு இல்ல!'
வந்தவர்களில் ஒருவன்

'அப்படி இல்ல.... அறிவிருக்க ஆட்கள் ஒரு
சிலர் பாவம்...'

ஜெயாப்பாவும் மோகனும் அருகிருந்து
ரிக்கட் வாங்கிக் கொண்டனர்.

மணி எழுந்து அவசரமாக 'ஜக்கட்'
டைப் போட்டுக் கொண்டு,
" அண்ணா இவங்க கொழும்புக்கு அறிய
மூன்று மணிக்கு கோல் எடுக்கவேணும்.. அடிச்சு
விட்டு வாறன் "
என்று சொல்லிக் கொண்டே
இறங்கினான். ஜெயாப்பாவின் மனைவியும் மோக
னின் மருமகனுமாகும் கொழும்பின் திருமணத்
துக்குப் போவதற்காக இருக்கை வைத்திருந்த சீனை
எடுத்து ஒரு ரிக்கட்டை வாங்கினான் விக்கன்.

'பார்த்தியா மணி மாறிட்டான்!'
'எந்தவொரு காரியத்துக்கும் ஒரு சதமும் கேட்க
மாட்டான்!'

அவரவர் அபிப்பிராயங்கள் வார்த்தை
களாக வெளி வந்தன.

உடனுக்கு காலையில் மூன்று மணிக்கு
ராத்திரியும் காத்திருக்கத்தான் மணியின்
மனம் சிலக்கமாகவே இருந்தது. ஒருவேளை இன்று
போன் பண்ணிப் பார்த்தால் அறியலாம். நம்மை
யைபோடு போன் பண்ணினான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"வாங்கோ.... நாதன் இருக்கிறீரோ"

"இருக்கம்.... இருக்கம்"

தலையணையை சரித்தான் மெல்ல நிமிர்ந்தார். சிவனை வைத்துவிட்டு வாசலிருந்து வேகமாக நடந்தான். கண்ணனிடம் கடப்பியோடும் நாதன் சொன்ன விடயம் இருந்தான்.

"அப்பாவை இந்தியன் ஆமி கடத்திக்கொண்டு போய் வைச்சிருந்து ஒரு இடத்தில் விட்டவங்கள்... அந்த நாள் அம்மா காசு கொண்டு போய் எடுத்தவா... காசையும் வாங்கிக் கொண்டு விட்டவங்கள். பிறகு அந்த நாள் வந்து கடத்திக் கொண்டு போய் நல்லா அடிச்சுப் போட்டு சுட்டுப் போட்டு விட்டவங்கள் இப்ப ஆஸ்பத்திரியில கிடக்கிறார்... நான் நேற்றுத்தான் ஊரில இருந்து வந்தனான்"

மணி எவ்வளவு கஷ்டப்பட்டு சேர்த்த காசு இருந்தால் சாப்பிட்டிருக்கமாட்டான். நல்ல உடுப்புகளெல்லாம் உடுத்திருக்கமாட்டான்.

தர்மம் தலைகாக்கும் தக்க சமயத்தில் உயிர்காக்கும். அவர் எழுதியது தர்மம் உயிர்காக்குமாம். மணி ஒரு பெரியவனும் பிறருக்கு உதவி செய்திருக்கமாட்டான். தர்மம் செய்திருக்கமாட்டான். பொது நலத்திற்கோ தன்னலத்திற்கோ அவனுடைய காசு பயன்படவில்லை. நல்ல காரியத்திற்கோ, கொண்டு செலவோ, உயிர்காப்பிற்கோ பயன்படாத அவனுடைய காசு தர்மம் செய்யத் துணியாவிட்டாலும் தன்னையே காக்க துணியவுமாக விட்டது'.

(கற்பகவல்லி)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ASSOCIATION DES EC
ஐரோப்பிய
VERDAND DEN TAM
ASSOCIATIO

# சிறுகதை போ

**தனிநாயகம் அடிகள் நினைவாக அகில உலக ரீதியாக ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் நடாத்தும் சிறுகதைப் போட்டி.**

1) போட்டி முடிவு திகதி: 14 - 01 - 1990.
2) போட்டி முடிவு பற்றிய அறிவிப்பு 14 - 04 1990.
3) முதலாவது பரிசுத் தொகை — 3,000 FR.
இரண்டாவது பரிசுத் தொகை — 2,000 FR.
மூன்றாவது பரிசுத் தொகை — 1,000 FR.

மேலும் தெரிவு செய்யப்படும் 10 கதைகளுக்கு தலா 500 FR பரிசாக வழங்கப்படும்.

### போட்டிக்கான விதிமுறைகள்

1) எழுத்தாளர்களுக்கு எந்தக் கருத்தினையும் சுதந்திரமாக வழங்குவதற்கு பரிபூரணமான உரிமையுண்டு.

2) ஆக்கங்கள் ஏற்கனவே பிரசுரிக்கப் படாதவையாகவும், வானொலி, தொலைக்காட்சிகளில் ஒலி, ஒளி பரப்பப்படாதவையாகவும் இருக்க வேண்டும்.

3) போட்டியில் பங்குபெறும் ஆக்கங்கள் ஏற்கனவே வெளிவந்தவையாக நிரூபிக்கப் படுமாயின் போட்டியில் இருந்து நிராகரிக்கப்படுவதுடன் வழங்கப்படும் பரிசில்கள் வாபஸ் பெறப்படும்.

4) கதைகள், கதைகளின் தலைப்போடு தாள்களின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# …VAINS TAMOUL DANS L'EUROPE
# …ழ் எழுத்தாளர் ஒன்றியம்
## …CHEN SCHRIFTSTELLER IN EUROPE
## …TAMIL WRITERS IN EUROPE

# …டி அறிவி!!!

5) கதைகளின் தலைப்பு, பெயர், முகவரி, புனைபெயரும் என்பன பிறிதொரு தாளில் எழுதி கதைகளுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

6) கதைகள் அனுப்பி வைக்கப்பட்டமை பற்றி எமக்கு ஒரு வாரத்துக்குள் கடித மூலம் அறியத்தருவது விரும்பத்தக்கது.

7) போட்டியில் தேர்ந்தெடுக்கப்படும் கதைகள் நூலாக வெளிவரும் இதன் முழு உரிமையும் ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்துக்கு உண்டு

8) போட்டிக்கு அனுப்பி வைக்கப்படும் கதைகள் எக்காரணம் கொண்டும் திருப்பி அனுப்பி வைக்கப்பட மாட்டாது.

9) ஐரோப்பிய தமிழ் எழத்தாளர் ஒன்றிய தேர்வுக் குழுவின் முடிவே இறுதித் த்ர்வாகும்.

அனைத்துத் தொடர்புகளுக்கும்—

ASSOSIATION DES ECRIVINS
TAMOULS DANS L'EUROPE
BOITE POSTAL 89
93600 AULNAY S/BOIS
FRANCE.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வளமான எதிர்காலத்திற்கு

## - கார்த்திகேசன் -

(தொடர்)

உதாரணமாக சாதாரணமாகப் பெரும்பா-
லாரிடம் நிலவிவரும் புகைப்பழக்கத்தையெப்படித்
தவிர்க்கலாம் என்று சற்றுச் சிந்தித்துப் பார்ப்போம.
முதலாவதாக இப்பழக்கம் உள்ளவர்கள் தங்களா-
ல் இதை ஒருபோதும் தவிர்க்க முடியாது என்ற
எண்ணத்தைக் கைவிட வேண்டும். அப்படிக்
கைவிட்டாற்றான் தொடர்ச்சியாக நடவடிக்
கையில் இறங்குவதில் பலன் உண்டு. இந்தத்
தீய பழக்கத்தை யாரும் நன்மை பயக்கும் என்று
சொல்வார்களா? இப்பழக்கமுடையோர் கூடப்
புகைத்தல் எந்த விதத்திலாவது தம்மைத் திருப்தி-
படுத்தும் என்று கூறுவார்களா?

இப்பழக்கமுடையோர்
உள்ளத்தைவிட உடலின் பௌதிகத் தாக்கத்தி-
ற்குத்தான் கூட ஆளாகின்றார்கள். எனவே இதை-
த் திடீரென்று நிறுத்துவது என்பது உள்ளத்தை-
யும் உடலையும் பெருமளவு பாதிப்பதுடன்
திருப்தியீனம், கோபம், வெகுளி என்று சொல்லப்
படுகின்றவையுடன் பஞ்சமா பாதகங்களும் சாதா-
ரணமாக உங்களை ஆட்கொள்ளும்.

இப்பழக்கத்தை விட நினை-
ப்பவர்கள் இதற்காக இன்றொரு புதிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பழக்கத்தைக் கொண்டுவருவது இதற்குப் பரிகாரமாகாது. முதலில் எவ்வளவு தூரம் இப்பழக்கத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து 1,2 என்ற ரீதியில் குறைத்தால் (விட வேண்டும் என்ற எண்ணத்துடன்) உங்களையறியாத ஓர் வெறுப்பு வரும். அந்நிலையைக் கெட்டியாகப் பிடித்தால் நிச்சயம் ஓரளவு வெற்றி பெறுவீர்கள் என்பதில் சந்தேகமில்லை.

மேலும் தீய பழக்கங்களை நாமே உருவாக்குகின்றோம். நாம்தான் அதை ஏதோ வழியாற் தீர்க்க வேண்டுமேயொழிய பிறமாற்றுக் காரணிகள் எமக்குப் பெருமளவு உதவாது என்பதை மறக்கக்கூடாது. மேலும் புகைப் பழக்கமுடையவர்களில் 85% ஆனோர் "கொறட்டை விடும் பழக்கமுடையோர் என்றும் நித்திரையில் தாமே கண்டபடி புலம்புவார்கள் என்றும் அமெரிக்க அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள் அத்துடன் புகைக்கும்போது கூடிய அளவு சக்தியைக் கதைப்பதில் விரயம் செய்வார்கள் அல்லது சிந்திப்பதில் உறுதியை இழப்பார்கள் என்பதும் அறிஞர்களின் கருத்து ஆகும்.

மேலும் புகைத்தலை சில உபாயமுறையாலும் தவிர்க்க முடியலாம். நீ உனது குடும்பத்தினருடனே அன்றி வேறு யாருடனோ இருக்கும்போது தவிர்க்க வேண்டியிருக்குமெனில் அப்படிப்பட்ட சூழலை அதிகம் விரும்புவது உனது முயற்சிக்கு ஓரளவு உதவி செய்யும் அடுத்து உன்னைவிட வயதில் ஒரு மாதம் தானும் மூத்தவராயின், அவர் முன்னிலையில் புகைப்பதி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ல்லை என்று முடிவெடுத்து வைப்பதும் உனது முயற்சிக்கு உதவி செய்யும். பெண்கள், குழந்தைகள், கிழ. போன்றோர் இருக்கும் இடங்களிலும் ஆலயம், இரண்டோ அன்றி பலரோ இருக்கும் கூட்டம் போன்ற இடங்களில் புகைப்பதில்லை என்று முடிவெடுப்பதும் பெருமளவு உதவி செய்யும்.

மேலும் புகைக்கும் போது சுற்றும் முற்றும் உள்ளவர்களையும் சுற்று அவதானி!, அவர்களது முகங்களை எப்படியென்பதை நீயே புரிந்தால் உனக்கே ஓரளவு வெட்கமாகத்தான் இருக்கும். அத்துடன் புகைத்தலில் கௌரவமானதென்று ஒரு சாரார் கருதுவதுண்டு. இது முற்றிலும் பொருந்தாத ஓர் கருத்தாகும். இது புகைத்தல் பழக்கமுடையவர்கள் எப்படி தம்மை மாற்றியமைக்கலாம் என்று அறிகிய ஓர் விடயம் ஆகும்.

எனவே நம்மை நாமே புரிந்து திட்டமிட்டு செயற்படுத்துவோமேயானால் நிச்சயம் வெற்றி பெறலாம் என்பது உறுதி.

முற்றும்

---

IN THE FUTURE, EVERYBODY WILL BE FAMOUS FOR AT LEAST FIFTEEN MINUTES

— ANDY WARHOL —

www.tamilarangam.net

# விழுதுகள்

— தொடர் —

## இளங்கோவையன்

அவன் நினைவுகள் ஊரிலேயே தங்கிநின்றது. மாமா ஊரிலேயே பெரிய பணக்காரர். சந்திக்கடை சண்முகம் என்றால் சின்னப்பிள்ளையும் கைகாட்டி விடும். அவ்வளவு பிரபல்யம்.

அப்பாவின் தன்மானஉணர்வு 'யாரிடமும் கைநீட்டி எதையும் வாங்காத தன்மை. மாமா குடும்பத்தை வெகுகாலம் முன்னரே எங்களிடம் இருந்து தள்ளி வைத்தது. நல்லது கெட்டதற்கு வந்ததன்றி வேறு ஒருபோதும் மாமா தங்கள் வீட்டிற்கு வந்ததை சந்திரன் அறிந்திருக்கவில்லை. இவ்வளவிற்கும் அம்மா கூடப்பிறந்த தங்கை. சுகந்தி மட்டும் மாமி மச்சான் என்று அடிக்கடி வீட்டிற்கு வந்து

போவாள். புது உடை உடுத்து வந்தாளோ புது நகைபோட்டு வந்தாளோ சுகந்தி போன பின்னர்

"வந்திட்டா தங்காளிட்டை காசு கிடக்கெண்டு காட்ட"

என்று பழிப்புக் காட்டும் தங்கையரைக் கடவும் அக்காதான் அதட்டுவாள். அக்கா இயல்பிலேயே அன்பு கொண்டவள். பிறருக்கு தீங்கு நினைக்க கனவில் கூட அவள் நினைக்கமாட்டாள் என்றே இவளுக்குத் தோன்றும். வறுமை இவ்வளவு தூரம் குரோதத்தைக் கொண்டு வருமோ? அவள் தங்கைகளை எண்ணி கவலைப்படுவாள். அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது. பிறந்த மனிதர் வறுமையில்லாது இருத்தல் அரிது. அதனிலும் அரிது வறுமையில் செம்மை. காசு பணமில்லாமல் இருத்தல் மட்டுமா வறுமை. அன்பில்லாமல் இருத்தல், மற்றவரை நேசிக்காமல் இருத்தல் இதெல்லாம் வறுமை தானே.

பெண்களே! என் இனிய பெண்களே நீங்கள் இவ்விதம் வளருவதனில் உங்களிடம் வளரும் வித்துக்கள் எவ்விதம் அன்பு செய்யும், நேசிக்கக் கற்றுக் கொள்ளும். அவள் சின்னச்சின்ன உதாரணங்களுடன் அன்பு செய்வதை பிறரை நேசிப்பதை எடுத்துச் சொல்வாள். புத்தரின் ஆனந்த மார்க்கத்திலிருந்தும்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காந்தியின் வாழ்க்கையிலிருந்தும் மேற்கோ
ள் காட்டுவான். அக்கா அருகிலிருந்து அவன்
உச்சி மயிரைக் கலைத்து 'தம்பீ' என்பாள்.
அந்த ஒற்றைச் சொல்லில் அவளின் கண்களின்
பார்வையில் உலகையே அன்புடன் பார்க்க
அவன் கற்றுக் கொள்வான். புத்தகங்கள்
வாசித்தலின் அவசியத்தை அவளிடம்
இருந்துதான் இவன் கற்றுக் கொண்டான்.
பொழுது போக்குப் புத்தகம் என்று தொடங்கி
இன்று சிந்திக்க, அறிந்து கொள்ள என்று
பெரும் பசியுடன் தொடர்கிறது.
அம்புலிமாமா சிரசத்தைச் சீலன் என்று
தொடங்கி இன்று Emersan, பேர்
கார்னே, பாலகுமாரன் என்று தொடர்கிறது.

'அக்கா என் அக்கா நீ இப்பொ
ழுது என்ன செய்து கொண்டிருக்கிறே'

'உலகத்தை பார்க்க மனிதரை
நேசிக்க எனக்கு கற்றுக் கொடுத்தாயே....
எத்தனை கதைகள் அந்தத் தாழ்ந்த கூரை
யின் கீழ் கதைத்திருப்போம்.

'தம்பி, நாங்கள் வசதியான
ஆட்களாய் ஊரிலே பெரிய ஆட்களா
ய் வந்து கஷ்டப்படும் எல்லோருக்கும்
வழிகாட்டி உயரச் செய்து' உன்
பேச்சினில் நம்பிக்கை நிறைந்திருக்கும்.
உன் வார்த்தைகளில் ஒரு கம்யூனிஸ்

www.tamilarangam.net

இருப்பான், ஒரு புத்தன் இருப்பான்.

உன் நம்பிக்கை என்னையும் தொற்றிக் கொண்டது.

"எங்கெங்கு காணினும் சக்தியடா" பாரதிக்கும் உன்னைப் போல ஒரு தமக்கை இருந்திருப்பாளோ? அல்லது எவ்வகையிலும் ஒரு பெண் அருகிருக்கச் செய்து உரங் கொடுத்திருப்பாளோ?

இயல்பாகவே அகத்தின் மேல் அன்பு கொண்டிருந்தாலும் அதை உரக்கப்படுத்தி உறுதியாய் மலரச் செய்தவர் அக்காதான். 'தம்பி உனக்கு ஒரு நல்ல துணையாகச் சக்தியாக இருப்பாள். உன் உயர்விற்கும் நம்பிக்கைக்கும் அவள் துணையிருப்பாள்' என்று அன்று சொன்னவளும் அக்காதான்.

அக்கா நிச்சயம் வேதனைப் படுவாள். அவள் அன்பு எங்களைச் சுற்றித் தான். நாங்கள் ஒன்று சேர முடியாமற் போவது அவளிற்கு மிகவும் வருத்தமாகத் தான் இருக்கும்.

அக்கா இங்கே வா....

அந்தக் கிராமத்தின் எல்லைகளைக் கடந்து வா.... உலகம் எவ்வளவு விசாலமாக இருக்கிறது. அனுபவங்களும் அவமானங்களும் துன்பங்களும் வரைமுறைகளும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வழிவகைகளும்.

இது பெரிய பாடசாலைதான். அவ்வளவு படிக்க வேண்டிய விடயங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவைகள் சிந்தித்து தெரிந்து நடைமுறைப்படுத்த வேண்டியவைகள்.

நிச்சயம் நாம் வாழ வேண்டும் மனிதராய். மனிதன் மனிதனை மதிக்கத் தெரிந்தவர்களாய். யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் அடைந்து கிடந்த பெரிய உருவங்களுடனும் சின்ன மனங்களுடனும் நாம் இனியும் வாழ வேண்டாம்.

ஓ... அக்கா நான் திரும்பி வரும் பொழுது நீ ஆச்சரியப்பட்டுப் போவாய். என் உடல் வளர்ச்சியைப் பார்த்தல்ல. என் அறிவு வளர்ந்திருப்பதைப் பார்த்து. வளர வேணும் என்ற ஆவல் நீ வளர்த்து விட்டதாய். அது இன்று கிளை விட்டு வேர், ஓடி பரவி....

அவன் தன் நினைவுகளில் மூழ்கியிருந்து போய் நின்றான்.

— தொடரும் —

www.tamilarangam.net

# உலக வலம்...

* நடக்கவிருக்கும் உபகண்ட தேர்தல்

இந்தியப் பாராளுமன்றம் அடுத்த பொதுத்தேர்தலிற்காக கலைக்கப்பட்டு எதிர் வரும் நவம்பர் 22ந் திகதி தேர்தல் நடாத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. உலகின் பெரிய புகழ் வாய்ந்த ஜனநாயக நாடான இந்தியாவில் நடைபெறவுள்ள இத்தேர்தல் உலக மக்களால் பெரும் ஆர்வத்துடன் கவனிக்கப்படுகின்றது.

அதுவும் அடுத்த அதிகாரத்தைக் கைப்பற்றுவது யார் என்ற ஆதாரமான கேள்விக்கு விடை இந்திய கூட்டணி எதிர்க்கட்சிகளிற்கிடையே தேர்தல் தொகுதிகளை முரண்பாடற்ற முறையில் பகிர்ந்து கொண்டு இந்திரா காங்கிரஸிற்கு எதிரான பலமான எதிர்ப்பைக் காட்டுவதிலேயே தங்கியுள்ளது.

Public opinion Trends

அறிஞரும் அரசியல் ஆலோசகருமான திரு. ராஜேந்திரா சரீன் கருத்துத் தெரிவிக்கையில் "எதிர்க் கட்சிகளிற்கிடையிலான பாராளுமன்ற ஆசன இட ஒதுக்கீடே மிக முக்கியமான விடயம்" என்றும் "எதிர்க்கட்சிகள் கூட்டணி தங்கள் சார்பில் ஒரு வேட்பாளரையே ஒவ்வொரு இந்திரா காங்கிரஸ் வேட்பாளருக்கும் எதிராக நிறுத்துமாயின் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றி ஆட்சியமைக்கும் சந்தர்ப்பமுண்டு" என்றும் "குறைந்தபட்சத்தில் 200 ஆசனங்களைக் கைப்பற்றுவதிலேயே பெரும் பிரச்சினையை எதிர் நோக்கும்" என்றும் கூறியுள்ளார்.

www.tamilarangam.net

1984 இல் பெரும்பான்மை பலம் பெற்று ஆட்சியமைத்த ராஜீவ் அரசின் செல்வாக்கு குறைவதற்கு போபர்ஸ் (BOFORS) விவகாரமும் பஞ்சாபில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையை அமைதிக்குக் கொண்டு வருவதில் தவறி விட்டமையும் காரணங்களாகும். அத்துடன் இன்றும் இந்தியாவின் பாதுகாவலர்களிலும் ஒரு பெரு தேசியக் கட்சியாக இந்திராகாங்கிரஸ் ஆட்சிப் பங்கேற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

* ANC உடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட தென்னாபிரிக்க அரசு விருப்பம்.

தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலாவின் தேசிய ஆபிரிக்கக் காங்கிரஸின் (ANC) முக்கிய தூண் திரு. வோல்டர் சிசுலுவும் இன்னும் ஏழு பேரும் விடுதலை செய்யப்பட்டதும் தென்னாபிரிக்க அரசாங்கம் தேசிய காங்கிரஸின் வெளிநாட்டு தொண்டர்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளமையும் முக்கியமான செய்தியாகும். தென்னாபிரிக்காவின் சட்டமிடல் அபிவிருத்தி அமைச்சர் திரு. கெரிற் விலியோன் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் "இது எங்களுக்கு நம்பிக்கை தருகின்றது" என்றும் "இக்காரியம் ஆரம்பத்திலேயே தொடர்பையும் முன்னேற்றத்திற்கான அறிகுறிகளையும் காட்டுகின்றது" என்று கூறினார்.

திரு. வோல்டர் சிசுலு வெளிநாட்டு தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் "நாங்கள் தீவிரவாதத்தைக் கைவிடவில்லை என்றும் எது நடந்த போதிலும் தொடரும்" என்றும் கூறினார் அவர் மேலும் கூறுகையில் "அதுவே இந்நிலைக்கு அவர்களைத் தள்ளி விட்டது" என்றும் "நாங்கள் இந்நிலைமைகள் அமைதியைக் கொண்டுவரும்" என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதுக்கவிதை

## தோற்றம், வளர்ச்சி, நோக்கம்

— டாக்டர் இ. மறைமலை —

புதுமையியற் பண்பாடு எதனையும் ஐயத்தின் பாற் படுத்துவதையே—சுற்றியிருக்கும் எல்லாவற்றையும் ஐயுறு வதையே—நல்வாழ்வின் வழிகாட்டியாகக் கருதுகிறது. ஏற்றுக் கொள்ளப்பட்ட பெறுமதிகளை (Accepted values) தற்காலிகமாகத் தள்ளிவைத்து விட்டுச் சிந்திக்க முற்படு கிறது.

தனிமனிதவாதம் புதுமையியலுக்கேயுரிய நோக் காகும். உலக நிகழ்ச்சிகள் அனைத்தையும் தனது போக்கில் கண்டு தனது பார்வையை வழங்குவதே புதுமை யியல் எழுத்தாளர் மேற்கொள்ளும் நெறியாகும். ஆன்மீக நித்திய வாதம் (Solipsism) என்று கூறப்படுகின்ற "ஆன்மா மட்டுமே அழிவதில்லை ஏனையவை யனைத்தும் அழிகின்றன; மாறுகின்றன" என்றும் கோட்பாட்டுக்குப் புதுமையியல் தாவிவிடுகின்றது. கோட் ஃபிரெய்டு பென் (Gotfried benn) என்னும் செருமானியக் கவிஞரின் கூற்றை இதற்குச் சான்றாகக் குறிப்பிடலாம். (Howe p. 5)

"மெய்ம்மை (யதார்த்தம்) என்ற ஒன்று இல்லை. புதிய உலகங்களைத் தொடர்ந்து உருவாக்குவதனையும், திருத்தியமைத்தலையும், தனது படைப்பாற்றலால் புதிய உலகங்களை மீண்டும் மீண்டும் ஆக்கியமைத்தலையும் தொழிலாகக் கொண்ட மனித மனவுணர்வே மெய்ம்மை யானது ஆகும்." என்பர் பென். தொழிற் புரட்சியும், அறிவியற் புரட்சியும் புதுமைகளை வளர்த்துக் கொண்டிருக் கும் நமது காலப் பட்டறிவுகளை (அனுபவங்களை) தனித் தன்மை வாய்ந்தவையாக, எவ்விதத் தொடக்கமும் இல் லாத முடிவுகளாக, எவ்வித முன்மாதிரியும் அற்ற புதிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளைவுகளாகப் புதுமையியலாளர் கருதினர். "1910 டிசம்பர் அல்லது அதனையொட்டிய காலப்பகுதியில் மானிட இயல்பே மாற்றமடைந்து விட்டது" என்னும் வெர்ஜினியா உல்ஃபின் கூற்று மரபுத் தொடர்ச்சியினின்று தன்னை விடுவித்துக் கொண்டு புதுமையின் தோற்றம் முகிழ்த்திருப்பதை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்துள்ளது.

உரைநடை, புதினம், சிறுகதை, நாடகம் ஆகிய ஏனைய இலக்கிய வகைகளைப் பாதிப்பதைப் போலவே கவிதையையும் "புதுமையியல்" வெகுவாகப் பாதித்தது. தெலுங்குக் கவிதையில் புதுமையியலின் தாக்கத்தைக் கூறுகின்ற அமரேந்திரா, "காலத்தின் அறைகூவலை ஏற்றுச் சமகால அனுபவத்தோடு ஒருங்கிணைந்த வகையில் தமது படைப்பாற்றலை வெளிப்படுத்தும்" கவிஞரையே புதுமையியற் கவிஞர் எனக் குறிப்பிடுகின்றார். புதுமைப் பண்பு (Modernity) என்பதை விளக்க முற்படும் அமரேந்திரா வாழ்வின் அனைத்து அனுபவங்களையும் கவிதையாக்கத்திற்குரியதாகக் கருதுவதே புதுமையியற் பண்பென்கிறார். வாழ்வின் ஏந்தக் கோணத்தையும் நாமடையும் எத்தகைய அனுபவத்தையும் கவிதையாக்கத்திற்குரிய கருப்பொருளாகவே புதுமையியற் கவிஞர்கள் கொள்வர். "அனைத்தையும் கொள்வேன், எதனையும் தள்ளேன்." (I accept all, I reject none) என்னும் வால்ட் விட்மனின் அறிவிக்கையே புதுமையியற் கவிஞனின் கொள்கை முழக்கமென்கிறார் அமரேந்திரா.

(Moderrity and Telugu Poetry : Amarendra-Tradition and Modernity in Telugu and Urdu literature

---

* "சுவடு தெரிகிற தடத்திலே செல்ல மறுத்து புதுத் தடம் போட்டுக் கொண்டு இலக்கியத்தின் எல்லைகளைச் சற்று விரிவடையச் செய்ய முயல்கிறவர்களின் படைப்புகளை வரவேற்பது என்பதை "எழுத்து" தனது லட்சியமாக வரித்துக் கொண்டது." (பு. தோ. வ ப. 76) என்னும் வல்லிக் கண்ணனின் விளக்கம் மாறுபட்ட பாதையில் நடைபோட முற்பட்ட 'எழுத்து' இதழின் புதுக்கவிதை முயற்சிகளைத் தெளிவாக்குகிறது.

www.tamilarangam.net

புதுமையியலின் நோக்கையும் போக்கையும் ஓரளவேனும் தெளிவுறுத்திய பெருமை "எழுத்து" இதழுக்கேயுரியது. புதுமையியற் கோட்பாடுகளை விளக்கி அவற்றின் அடிப்படையில் எழுத்து இதழின் புதுக்கவிதை முயற்சிகளை மதிப்பீடு செய்ய எவரும் முனைந்திலர்.

I. C. C. F. 1967) தனி மனித உணர்வு நிலையை அடிப்படையாகக் கொண்டு நடப்புலகை அளந்தறிய முனைதலே புதுமையியற் கவிஞனுக்குரிய தனிப் பண்பாகும்.

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் மேற்கு ஐரோப்பாவில் பிரெஞ்சுக் குறியீட்டியல் மரபுகளே பெரிதும் போற்றப் பட்டு வந்தன. மல்லார்மே புகழ் பெற்ற குறியீட்டியற் கவிஞராவார். இக்குறியீட்டியல் நெறியிலிருந்து புதுமையியல் நெறியை நோக்கிக் கவிதை திசை திரும்பிய வகையினைத் தியோ எர்மன்சு தமது "புதுமையியற் கவிதையின் கட்டமைப்பு" (The structure of modernist poetry, London ...1982) என்ற நூலில் தெளிவுற விளக்குகிறார். இத்தகைய மாற்றத்திற்கு வித்திட்டவர் பிரெஞ்சுக் கவிஞர் அப்பொலினேர் ஆவர். கவிஞராக மட்டுமன்றித் திறனாய்வாளராகவும் விளங்கிய அப்பொலினேர் பிக்காசோவின் ஓவியங்களை அறிமுகப் படுத்திய பெருமைக்கு உரியவர். பிக்காசோவின் கியூபிசம் புதுமைநாட்டம் கொண்ட அப்பொலினேரைப் பெரிதும் கவர்ந்ததில் வியப்பில்லை.

ஒளிப்படம் (Photo) கண்டு பிடிக்கப்பட்டமை, ஓவியக் கலையுகத்தில் ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்தியது. அது வரை இயற்பண்பு வாதத்தை அடியொற்றி (Naturalism) உள்ளதை உள்ளவாறே ஓவியந்தீட்டி அளித்து வந்த ஓவியர்களை ஒளிப்படத்தின் கண்டுபிடிப்பு திணறச் செய்து விட்டது. கருவியின் மூலம் துல்லியமாகவும், தெளிவாகவும் ஒரு பொருளின் உருவத்தைப் பெறமுடியும் வாய்ப்பு ஏற்பட்டபின் ஓவியத்திற்கு என்ன வேலை என்னும் வினா எழுந்தது. இவ்வினாவிற்கு ஓவியர்கள் கண்ட விடையே வெளிப்பாட்டுப் பாங்கியல் (Expressionism) கியூபிசம் (Cubism), ஆர்ஃபிசம் (Orphism), ஃபாவிசம் (Fauvism) போன்ற கலையுலக இயக்கங்களாகும். ஒளிப்படம் கண்டு பிடிக்கும் வரை உள்ளதை உள்ளவாறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓவியந் தீட்டுவதில் கருத்துச் செலுத்தி வந்த ஓவியர்கள் உள்ளதை உருமாற்றித் தருதலும், தம் உணர்வுநிலைக் கேற்ப உருச்சிதைத்து அளிப்பதையுமே கலையின் இன்றி யமையா அடிப்படைப் பண்புக் கூறுகள் என எண்ணத் தலைப்பட்டனர்.

புதிய பொருளைப் புலப்படுத்தும் வகையிலும், சுவைஞர்களுக்குத் தமது மனக்கிடக்கையைக் குறிப்பால் உணர்த்தும் வகையிலும் உருச்சிதைவு (Distortion) உருவ நிலைமாற்றம் (Transtormation) என்னும் உத்திகளைக் கையாண்டனர். (Art in other words distorts and transrforms : Theo hermans p—59) ஓவியர்கள், நகல் செய்யும் வேலையை மேற்கொள்வதைக் காட்டிலும் புற உலகைக் கூர்ந்து பார்த்து, தோற்றங்களைத் தம் மனத்துள் பதிய வைத்துக் கொண்டு தமது எண்ணங்களுக்கும் கருத் துக்களுக்கும் ஏற்ப அவற்றை உருமாற்றி அளிப்பதே சிறப்பு எனக் கருதப்பட்டது. இச் சூழலில் புதுமையியல் ஓவியத்தைப் பெரிதும் போற்றிய அப்பொலினேர், தமது நண்பர் பிக்காசோ ஓவியக்கலையில் செய்த புரட்சியைக் கவிதைத் துறையிலும் செய்யவிழைந்தார். கவிஞன் உள் ளதைஉள்ளவாறே சித்தரித்துக் காட்டும் நகல்கலைஞனாக விளங்குவதை அவர் விரும்பவில்லை. கவிஞனை ஒரு படைப்பாளியாக ஒரு பிரம்மாவாக (Creator) அப்பொலி னேர் கருதினார். (p. 60) புறவுலக அனுபவத்தின் பிழிவாக அமைந்தாலும், கவிதை, தானேயொரு தனியுலகமாகத் திகழும் தன்மையது என அப்பொலினேர் எண்ணினார். முழுமைபெற்ற, தன்னியக்கம் கொண்ட, தனக்கெனத் தனி நியதிகளும் பெறுமதிகளும் (Values) கொண்ட தனியுலக மாக அவர் கவிதையைக் கருதினார். குறியீட்டியல், புறவுலகு கடந்த பிறிதோர் உலகு இருப்பதை உணர்த்தும் பான்மையது. ஆயின் புதுமையியல் ஒரு மாற்று உலக மாகக் (an alternative universe) கவிதையைக் கருதியது. புறவுலகைக் கடந்து புதியதொரு நுண்ணுலகைத் தேடிப் புறப்படும் குறியீட்டியலாளர்கள் சிக்கல்களை நேருக்கு நேர் சந்திக்க அஞ்சித்தப்பி ஓடும் மனப்பான்மையுடைய தவிர்த்தல் வாதிகளாக (escapits) விளங்கினர். அயர் வூட்டும் நடைமுறை உலகைத் தவிர்த்து, மனநிறை வளிக்கும் மாற்று உலகு ஒன்றினைப் படைக்க முற்படும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதுமையியலாளர்கள், இருக்கும் உலகின் மீது தங்களுக்குள்ள வெறுப்பையும் சலிப்பையும் வெளிக் காட்டக் கவிதையைக் கருவியாக்கிக் கொண்டனர்.

புதுமையியலின் போக்கில் கவிதையைத் திசை திருப்பிய அப்பொலினேர், ஓவியக் கலையுலகில் ஏற்பட்ட புதுமையியற் போக்குகளைப் பின்பற்றிக் கவிதையில் மாற்றங்களைச் செய்ய முனைந்தார். அப்பொலினேரைப் பெரிதும் கவர்ந்த ஓவியக்கலை உத்திகள், கியூபிசமும், ஆர்ஃபிசமும் ஆகும். கியூபிச ஓவியங்களைக் கண்டு தொடக்கத்தில் சற்று திடுக்கிட்டுப் போன அப்பொலினேர், பின்னர் கியூபிச ஓவியங்களுக்கு அரண் செய்யும் வகையில் பல கட்டுரைகளை எழுதினார். அதன் பின்னர் இராபர்ட் டிலானேயின் ஆர்ஃபிசத்தை அவர் பாராட்டத் தொடங்கினார். கியூபிசம் புறவுலகை நம் புறக்கண்ணால் கண்டவாறு சித்தரிக்கக் கூடாது என்னும் கொள்கை யினை உடையது. கியூபிச ஓவியர்கள் பொருள்களின் வடிவந்தனை வடிவக் கோண முறையில் சித்தரித்தார்கள். இத்தகைய ஓவியமுறை வடிவக் கோணவியல் (Geometricism) என அழைக்கப்பட்டது. இது மெல்ல வளர்ச்சியடைந்து, வடிவங்களைக் கூறுபடுத்தி உருச் சிதைந்து மாற்றியமைக்கும் நெறி உருவாயிற்று. கூறுபடுத்துதலும், உருச் சிதைத்தலும் (Fragmentation & distortion) கியூபிசத்தின் இன்றியமையா நியதிகளாகும்.

கியூபிசம் திறனாய்வையும், பகுப்பாய்வையும் மேற்கொள்வதாகக் கருதப்பட்டது. வடிவங்களைக் கூறுபடுத்தித் தம் கருத்திற்கேற்ப அவற்றை மாற்றியமைத்தல் கியூபிச ஓவியர்களின் இன்றியமையாப் பணியாக விளங்கியது.

ஆந்தர் சாலமன் (Anther salmon) "பொருள்களை இத்துணைக் காலமும் நம் கண்கள் அவற்றைப் பார்த்துப் பழகியவாறு தீட்டுவதனைத் தவிர்த்து, அவற்றின் உண்மைத் தோற்றத்தினை உணர்த்தும் வகையில் ஓவியம் தீட்டுவதே கியூபிசம்" என்று குறிப்பிட்டார். புறவடிவம் ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கப் படுவதில்லை. வரையப்படும் ஒரு பொருளின் புறவடிவம் பல்வேறு அடிப்படைப் பண்புகளாகப் பகுக்கப் பெற்று, அப்பண்புகளில் இன்றியமையாதவை மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஏனையவை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விலக்கப் பெற்று ஓவியந் தீட்டப்படும் முறையே கியூபிசம் ஆகும். இப்புதிய ஓவிய முறையைக் கருத்துநிலை யதார்த்தம் (conceptual realism) என அப்பொலினேர் அழைத்தார். அதற்கு முன்னர் விளங்கிய ஓவியமுறை வெறும் நகல் செய்யும் பணியையே மேற்கொண்டது. ஆனால் கியூபிசம் ஒரு பொருளின் பண்புகளைக் கூறுபடுத்தி அவற்றின் இன்றியமையா அடிப்படைப்பண்புகளை இனங்கண்டு உணர்த்தும் வேலையை மேற்கொண்டது.

இவ்வாறு கூறுபடுத்தலும் (Deconstruction) மீட்டமைத்தலும் (Reconstruction) கியூபிச உத்திகளாக விளங்கின. இதன் படிமுறை வளர்ச்சியாகத் தோன்றிய ஆர்பிசம் வடிவக்கோண முறையிலான உருவங்களைப் புறக்கணித்து வண்ண வேறுபடுகளை (colour coutrast) அடிப்படையாகக் கொண்டது. இத்தகைய வண்ண வேறுபாடுகளால் ஏற்படும் ஒருங்கிணைவால் ஓவியர்களின் கருத்துக்களை தெளிவுறப் புலப்படுத்த முடியும் என டிலானே கருதினார்.

ஓவியக் கலையின் புதிய போக்குகளாகிய கியூபிசம், ஆர்பிசம் ஆகிய இவ்விரண்டையும், ஓவியத்தைப்பற்றிய தமது திறனாய்வுக் கட்டுரையில் அப்பொலினேர் நன்கு விளக்கினார். பிக்காசோ (Picasso) பிராக் (Braque) மெட்ஸிங்கர் (Metzinger) கிரிஸ் (Giris) ஆகியோரால் பின்பற்றப்பட்ட கியூபிசம் வடிவக்கோட்டை அடிப்படையாகக் கொண்டு, கருத்தைப் புலப்படுத்துவதற்கு, ஒரு முன் மாதிரியை (Model) தன்னுணர்வு சாராது, புறவய நிலையில் சித்தரிப்பதாக விளங்கியது. ஆனால் ஆர்பிசம் மனப்பதிவு நவிற்சியை (impressionism) அடிப்படையாகக் கொண்டு அதன் படிமுறை வளர்ச்சியாக வளர்ந்தோங்கி ஓவிய அழகினுக்கு முதலிடம் அளிப்பதாகும். டிலானே (Robert Delanay) தவிர லெகர் (leger) பிகாபியா (Picabia) தூசோம் (Duchome) என்று பல்வேறு ஓவியர்களை ஆர்பிசவாதிகளாக அப்பொலினேர் அறிமுகப்படுத்துகிறார்.

— தொடரும் —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாமும் இணைவோம்

கண்ணன் -

எம் மனம் போன்று
வாழ்வமைந்து
மகிழ்வதில்
வாழ விடாது
தடை துளைத்து
வதை செய்யும்
வாருடச்சனைப் பிசாசுகளின்
சிரம் கொய்திட

மனம் கிளரும்
வசந்தங்களிலும்
மலர் சொரியும்
தினவுகளிலும்
உடல் கொதிக்கும்
உணர்வுகளிலும்
இச்சை அடக்கி
வில்வளைத்து,

பாரதப் போர்
தொடுக்கும்
பஞ்சவர்களுடன்
நாமும்
இணைந்து
சிகண்டிகளாகி
சரம்
தொடுப்போம்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# BEING PEACE

"IF WE ARE PEACEFUL,
IF WE ARE HAPPY,
WE CAN BLOSSOM
LIKE A FLOWER,
AND EVERY ONE IN
OUR FAMILY,
OUR ENTIRE SOCIETY
WILL BENEFIT
FROM OUR
PEACE"

= THICH WHAT NANH =

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

